19th February 1959]

**Sri K. V. RAMASWAMY** : பெரிய ரஸ்தாக்களை விட சிறு சிறு ரஸ்தாக்கள் குக்கிராமங்களில் போடப்படாமல் இருந்துவருகின்றன. அதனால் விவசாயிகளுக்கு அநேக கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி அதில் குறைகள் இருந்தால், அவைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஏதாவது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா ?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON** : இது தனிப்பட்டதொரு ரஸ்தாவைப்பற்றிய கேள்வி. பொதுவாக ரஸ்தாக்களைப் பற்றிப் பேச நான் விரும்பவில்லை.

*Aluminium plant in Salem*

* 75 *Q*.—Sri V. V. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any investigation has been carried out by the Italian Experts on the possibility of starting an aluminium plant in Salem; and

(*b*) if so, the result thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The report of the Experts is awaited.

**Sri V. V. RAMASWAMI** : இது தனியார் துறையில் நடக்கப் போகிறதா அல்லது அரசியலார் துறையில் நடக்கப் போகிறதா, இப்போழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை விளக்கமாகச் சொல்லும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்த அலுமினியம் தொழிற்சாலையை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கார் நடத்துவதாக முதலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த ப்ளான் " ரிபேஸிங் " செய்யும் காலத்தில், இதற்கு ரொம்பக் குறைவான " பிரயாரிட்டி " தான் கொடுக்கப்பட்டது. ஆகவே, இதைச் சென்னை சர்க்கார், தனியார் துறையில் செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டு இன்று ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அதற்குக் கோயம்புத்தூர் பஞ்சாலைகள் சங்கத்தார் தலைமையில் ஸ்ரீ வெங்கடஸ்வாமி நாயுடு அவர்கள் சேர்மனாக இருக்கிறார்கள். அவர் இட்டாலியிருந்து வந்திருக்கக்கூடிய **Montecatinis** கம்பெனியுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவர்கள் இங்கு அலுமினியம் தொழிற்சாலை வைப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிதி முதலிய எல்லாவற்றையும்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இது தனியார் துறையில்தான் நடக்கும்.

Dr. A. CHIDAMBARANATHAN : Is it a fact that there is considerable difference of opinion among the experts, Italian, American and French?

The Hon. Sri R. VENKATARAMAN : There was.

Dr. A. CHIDAMBARANATHAN : May I know at what stage it is now and whether it has been reconciled?

The Hon. Sri R. VENKATARAMAN : The present assessment is that the bauxite at Salem is of sufficient liquid quality for establishing an aluminium plant there.

[19th February 1959

SRI V. V. RAMASWAMI : இந்தத் தொழில் எந்த வருடம் ஆரம்பிக்கப்படும் ? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாகவே சாமான்கள் செய்ய ஆரம்பிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த விதமான மெஷினரிகள் வேண்டும், எப்படி இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி இறுதியாக ஒரு எக்ஸ்பெர்ட் விசாரணை செய்த பிறகுதான் முடிவு செய்யப்படும். எப்ரல், மே மாதத்திற்குள்ளாக இடாலியிலிருந்து வந்த நிபுணர்களின் ரிப்போர்ட் வந்துவிடும். அதற்குப் பிறகு வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியதுதான். இரண்டு வருடங்களுக்குள் அலுமினியத் தொழிற்சாலை வந்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்.

SRI MOHAMED RAZA KHAN : Is it purely in the private sector, or will the Madras Government also purchase some shares in that?

THE HON. SRI R. VENKATARAMAN : There are several proposals in this regard. But I can only give the final decision. No decision has so far been taken. (Laughter.)

SRI A. M. ALLAPICHAI : Are the Government contemplating to have some kind of thing—some kind of hand—in this new venture?

SRI MOHAMED RAZA KHAN : A 'hand' means?

THE HON. SRI R. VENKATARAMAN : It is the Government that are handling the whole thing. The Government of Madras have incurred the expenditure with regard to the visit of the foreign experts and also the preliminary expenses in this regard. If the company comes into existence, then the Government will convert this amount into their shares or their loans.

*Village Industries Scheme*

* 76 *Q.*—SRI M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether dhobies and barbers are included in the list of village artisans eligible to get loans and subsidies under the Village Industries Scheme; and

(*b*) if so, the number of dhobies and barbers granted such loans during 1957–58?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI M. ETHIRAJALU : இப்பொழுது, குயவர்கள் மண் எடுத்து மக்களுக்குப் பயன்படக்கூடிய பொருள்களைச் செய்கிறார்கள். அதேபோல், தச்சனும், மரத்தைச் செதுக்கி மக்களுக்குப் பயன்படும் பொருள்களைத்தான் செய்கிறான். அதேபோல், சலவைத் தொழில் செய்யக்கூடியவர்களும், மனிதர்கள் தாங்கள் அணிந்துகொண்டிருக்கும் ஆடைகள் மிக அழுக்காகப் போய் இனி அதை அணிந்துகொள்ள முடியாது என்று அதை அப்புறப்படுத்தும்பொழுது மறுபடியும் அந்த அழுக்கு ஆடைகளைப் புதிய ஆடைகளாக உருவாக்கி, மனிதர்கள் மறுபடியும் அவைகளை அணிந்துகொள்ளும் வகையில் சலவை செய்து கொடுக்கிறார்கள்.

MR. CHAIRMAN ; The hon. Member cannot explain. This is not a supplementary question.